**கவனிக்க.**- 2006.06.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1452 - 2006 ජූනි 30 වැනි සිකුරාදා - 2006.06.30

*1452 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 606 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 606 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) ஊடக ஆளணியினருக்கான சமூகப் பாதுகாப்பு நலனோம்பல் திட்டம் சட்டமூலம் 2006, யூன் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்) சட்டமூலம் 2006 யூன் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூலை 07 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரதப் பகுதி

80/88 இறாத்தல் ஃபிஷ் பிளேற்றுக்களையும் (Fish Plates) 80 இறாத்தல் ஃபிஷ் போல்ற்றுக்களையும் நட்டுக்களையும் (Fish Bolts & Nuts) வழங்குதல்

தலைவர், திணைக்கள கேள்விச் சபை, இலங்கைப் புகையிரதப் பகுதி, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன :-

| பொருள் | அளவு | விபரப் பட்டியல் |
|---|---|---|
| I | 2000 ஜோடிகள் | ஃபிஷ் பிளேற்றுக்கள் 80 இறாத்தல் |
| II | 4000 ஜோடிகள் | ஃபிஷ் பிளேற்றுக்கள் 88 இறாத்தல் |
| III | 25000 ஜோடிகள் | ஃபிஷ் போல்ற்றுக்களும் நட்டுக்களும் 80 இறாத்தல் |

உற்பத்தியாளர்கள் தமது விலைக்கூறுகளை நேரடியாகவோ அல்லது அதிகாரத் தத்துவம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாகவோ சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 2,500 ஐச் செலுத்தி கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் 2006.08.16 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2006.08.18 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. கேள்விகள் மூடப்பட்டவுடன், கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத தலைமையகத்தில் உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக கையளிப்பதன் மூலமாகவோ "இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரதப் பகுதி, திணைக்கள கேள்விச் சபைத் தலைவர்" இடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திர படிவங்கள் எந்தவிதக் கட்டணமுமின்றி இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் பரிசீலிக்கப்படலாம். மேலதிக விபரங்களுக்கு இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சிய திணைக்களம், புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2436818.

7. உற்பத்தியாகும்/விநியோகிக்கப்படும் ஃபிஷ் பிளேற்றுக்களும், ஃபிஷ் போல்ற்றுக்களும் நட்டுக்களும் ஐ. எஸ். ஓ. 9001: 2000/பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9001:2000 கம்பனி சான்றிதழுக்கோ அல்லது அதற்கு சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமைத் தரத்துக்கோ அமைவானதாக பெறுநரினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை,
இலங்கை புகையிரதப் பகுதி.

தொடர்பு இல.: எஸ். ஆர். எஸ்./எவ் 6525

6-794

---

# ஏல விற்பனைகள்

## றுஹுணு அபிவிருத்தி வங்கி - ஊரகஸ்மன்ஹன்தி கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏல விற்பனை

றுஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் 2006.07.18 ஆந் திகதி மு. ப. 11. 30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- காலி மாவட்டத்தில் கரந்தெனியவில் அமைந்துள்ள மில்லகஹகெலே எனும் காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4 என்ற இருபத்தி இரண்டு தசம் எட்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 22.85பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்ச் செய்கைகளும் அடங்கலாக,

2. மேலே கூறப்பட்ட கரந்தெனிய எனும் ஊரில் அமைந்துள்ள மில்லகஹகெலே எனும் காணியில் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 5 கொண்ட இரண்டு றூட் மூன்று தசம் ஆறு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 3.65பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்ச் செய்கைகளும் அடங்கும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2003.11.14 ஆந் திகதியின் அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2004.09.22 ஆந் திகதிய "தினமின", "த ஜலண்ட்", "தினகரன்" போன்ற பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட ஏல விற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- ஊரகஹ சந்தியிலிருந்து அம்பலன்கொடைக்கு செல்லும் வீதியில் கி. மீ. 7 அளவு சென்றதும், மடகும்புர குடியிருப்பு தென்படும். அங்கிருந்து தல்கஹவத்த பாதையில் 500 மீற்றருக்கு முன்னே சென்று வலப்பக்கமாக இருக்கும் பராக்கிரம பாதையில் 300 மீற்றர் சென்றதும் பாதையின் வலப்பக்கமாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ். குறிப்பிட்ட பணம் கொள்வனவாளரினால் காசாக கொடுக்கப்படல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரியாக 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு விற்பனை விலையின் 2 1/2% ;

(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;

(5) விற்பனை செலவும் இதர செலவுகள் இருப்பின் அவையும்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரண அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382 ஏ நிலையத்திலிருக்கும் றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய விலையில் 10%க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் அச்சொத்துக்களை வங்கிக்கு விற்பனை செய்யவும் உரிமையுண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும், வேறுவிபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இல. 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்தை,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல. 041- 2228731

6-668

---

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி-கிராண்ட்பாஸ் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**ஒரு பெறுமதிவாய்ந்த சொத்துக்கான ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பத்து களணி பிரதேச சபை எல்லைக்குள் தலவதுஹேன்பிட்ட கெமுனு மாவத்தை, 98/37 ஆம் இலக்கமும் கொண்ட மில்லகாஹா வத்த என்றழைக்கப்படும் காணியின் அனுமதிபெற்ற அளவையாளர் ஜி. டி. விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1961, திசெம்பர் 1 ஆந் திகதி 33 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 04 என குறிப்பிடப்பட்டதும் அத்துடன் அனுமதிபெற்ற அளவை யாளர் எல். என். பர்ணாந்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, செத்தெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட 492/99 ஆம் இலக்கமும் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 01 என குறிப்பிடப்பட்ட காணியின் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட எல்லாப் பிரிவுகளும் அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் யாவும் உட்பட**

**விஸ்தீரணம்: 1ஏ. 0றூ. 20.15பே.**

வெதிசிங்க ஆராச்சிகே கபிலரத்ன (லங்கா சேர்விஸ் ஸ்டேஷன்-ஏக உரிமையாளர்) என்பவரால் சொத்து ஹட்டன் நஷனல் வங்கியில் அடகுவைக்கப்பட்டது. கொழும்பு பகிரங்க நொத்தாரிசு என். எம். சி. பீ. வெத்தசிங்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2000, சனவரி 10 ஆந் திகதிய 1473 ஆம் இலக்கம் கொண்ட பிணையின் மேல் கடமைப்பட்டவர் கட்டணம் செலுத்தத் தவறியமையால் ஹட்டன் நஷனல் வங்கியால் எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2006, யூலை 20 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு நாங்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வோம்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் ;
(3) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% ;
(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(5) மொத்த விளம்பரச் செலவு ;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000 ;

**தீர்மான அறிவித்தல்களுக்கு.**- தயவுசெய்து 2003.12.03 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும், 2005.11.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பவற்றை "பிரதம முகாமையாளர், சட்டம் (மீளப்பெறுதல்), தலைமை அலுவலகம், வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, இல. 479, ரீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2661815, 2661816, 261819.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கை அரச மற்றும் தனியார்துறை
வங்கிகளுக்கான கீர்த்திவாய்ந்த பட்டய
ஏலதாரர், மதிப்பீட்டாளர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி,
கண்டி
தொலைபேசி : 081-2227593
டெலி/பக்ஸ் : 081-2224371

நகர அலுவலகம் :
55ஏ, தர்மபால மாவத்தை,
கொழும்பு 03
தொலைபேசி : 011-2441761
டெலி/பக்ஸ் : 2448526
ஈமெயில்: :
samera@sri.lanka.net

6-711

**கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில்**

கல்கிசை பீச் ரோட்டில் 37/2 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள இரண்டு மாடி வீட்டுடனான 52.30 பேர்ச்சுகளைக் கொண்ட இடப்பரப்பினை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

சங்க ரக்கித விக்கிரமநாயக்க,
இல. 362/3, ஹைலெவல் வீதி,
நுகேகொடை,
(தற்பொழுது கொழும்பு 5, ஹெவ்லொக் வீதி,
இல. 15, கிங்ஸ்கோட் எபார்ட்மன்ட் 7/5)

வழக்கு இல. : 228/97/பிரிவிடல்

வழக்காளி

எதிராக

1. இலங்க தேவபிரிய விக்கிரமநாயக்க,
இல. 112, பிரிவெனா வீதி, கல்கிசை.

2. எலார பலபத்திர விக்கிரமநாயக்க,
இல. 37/2, பீச் ரோட், கல்கிசை.

எதிராளிகள்

இதனகத்து அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து அதனால் கிடைக்கும் பணத்தொகையை வழக்கின் கட்சிக்காரர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்க வேண்டுமென பிரகடனம் செய்து கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தால் இவ்வழக்கின் பிரகடனம் செய்யப்பட்ட 2002.03.05 ஆந் திகதிய இடைக்காலக் கட்டளையின்படி அவ்வாதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காக ஏலவிற்பனையாளர்/நீதிமன்ற ஆணையாளராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட தத்துவத்தின் மீது அவ்வாதனத்தை அவ்வாதனம் அமைந்துள்ள இடத்தில் 2006.07.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கொழும்பிலிருந்து காலி வீதியினூடாக காலியை நோக்கிச் செல்லும்போது தெகிவளை நகரத்தையும் பொது மயானத்தையும் தாண்டியபோது தெற்குப் பக்கமாக (கடல் பக்கம்) உள்ள "பீச் ரோட்" முடிவில் இடது பக்கத்தில் 37/2 ஆம் இலக்கத்தைக் கொண்ட இவ்விடம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- ஏல விற்பனை முடிந்தவுடன் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் பின்வருமாறு பணத்தை அதே நேரத்தில் பணமாகவோ வங்கிக் கட்டளையாகவோ ஏலவிற்பனை யாளருக்குச் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(1) கொள்வனவு விலையின் 25% ; (2) தெகிவளை-கல்கிசை மாநகர சபைக்கு வியாபார வரியாக 1% ; (3) மதிப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் ஏலவிற்பனைக்காகச் செய்யப்பட்ட எல்லா செலவுகளும் ; (4) ஏலவிற்பனையாளர் தரகுப் பணம் 2.2% ; (5) விற்பனை நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம். இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மீதி 75% க்கான பணத்தொகை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கின் வரவில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். மீதி 75% பணத்தொகையை குறிப்பிட்ட தினம் அல்லது அதற்கு முன் செலுத்தத் தவறினால் ஏற்கனவே செலுத்திய 25% க்கான பணத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

நீதிமன்றத்தினால் ஏலவிற்பனை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொள்வனவாளரின் செலவில் விற்பனை அத்தாட்சிப்பத்திரமொன்று நீதிமன்றத்தால் வழங்கப்படும். பின்னர் ஆதனத்தின் வெறுமையான உடைமையை கொள்வனவாளருக்கு பிசுக்கால் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லேபத்துவ, தெகிவளை கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பீச் ரோட்டில் (கடற்கரை வீதி) கல்கிஸ்ஸ வத்த, வரிமதிப்பு இல. 37/2 ஆகிய நிலமனை டீ. ஆர். குமாரகே நிலஅளவையாளரினால் அளந்து தயார் செய்யப்பட்ட 1998.08.19 ஆந் திகதிய 586 ஆம் இலக்க வரைபடத்தின்படி எல்லைகள் வடக்கே : கடற்கரை வீதி, வரிமதிப்பு இல. 43 மற்றும் 37/3 ஆகிய ஆதனமும் ; கிழக்கே : 20 அடி அகலமான தனியார் வீதியும் மற்றும் கடற்கரை வீதி, வரிமதிப்பு இல. 37/4 ஆகிய ஆதனமும் ; தெற்கே : சமுத்திராசன்ன மாவத்தை மற்றும் ; மேற்கே : ரெயில் வீதியும் ஆகிய இவ்வெல்லைகளுக்குட்பட்ட ஒரு றூட் பன்னிரண்டு தசம் மூன்று சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூட் 12.30பேர்ச்) அதாவது (0.13238) ஹெக்டேயர் விஸ்தீரணமுடைய காணியுடனான வீடும் ஆதனமுமாகும்.

உரித்துறுதி, வரைபடம் ஆகியன பற்றிய மேலும் விபரங்கள் கொழும்பு 7, கிறெக்கரி வீதி, இல. 59 இன் சட்டத்தரணி நொத்தாரிசு போல் ரத்நாயக்க அசோஸியேட்ஸ் (சட்டத்தரணி செல்வி தினோஷா மிரிஹான) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 2768048-49, 2688844-47

ஜே. சந்திரசேகர (ச. நீ.),
ஏலவிற்பனையாளர்/நீதிமன்ற ஆணையாளர்.

இல. 140/07, அரெவ்வல வீதி,
பன்னிபிட்டிய,
2006.06.15.
தொலைபேசி இல. 2851977

6-724

---

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

கடன் தொடர்பு இல. : 233/2000

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005.09.09 ஆந் திகதிய 1410 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.08.29 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்

பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட், குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2006.09.06 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், ஹிரியாலஹுத்பத்து, தித்தவலி கந்தஹய கோரளையில் மலஸ்ன கிராமத்தில் அமைந்ததும் அளவையாளர் நாயகம் சார்பில் அளவையாளர் சுப்பிரின்டன்டன்ற் எச். எம். கருணாரத்ன தயாரித்த 1987.12.03 ஆந் திகதியிட்ட எவ். வி. பி. 1267 இன் மேலதிக வரைபடம் இல. 5 இல் பார அத்தர ஹேன்யாய, கிரி அதுன்னே கல்யாய என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவது மான காணியின் துண்டு 9930 இலிருந்து உப பிரிவாக்கப்பட்டுள்ள துண்டு 9963 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட காணித்துண்டு- வடக்கில் : இதே காணியின் துண்டு 9962 2/2 உம் ; கிழக்கில் : இதே காணியின் துண்டு 9965 உம் ; தெற்கில் : துண்டு இல. 9939 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) மற்றும் துண்டு இல. 9964 உம் ; மேற்கில் : துண்டு இல. 9939 உம் (ஒதுக்கப்பட்ட பாதை) மற்றும் துண்டு இல. 9964 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் சைபர் தசம் சைபர் ஐந்து இரண்டு (ஹெக். 0.052) அல்லது இருபது தசம் ஆறு (0ஏ. 0றூ. 20.6பே.) பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் பீ652/206 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட மலஸ்ன கிராமத்தில் அமைந்த பார அத்தர ஹேன்யாய, கிரி அதுன்னே கல்யாயஹேன என அழைக்கப்படும் மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டபிள்யூ. ஆரியரத்ன தயாரித்த 2000.01.06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2/2000 இல் துண்டு 01 என தற்சமயம் விபரித்துள்ள காணித்துண்டு அண்மைய மீளளவையின்படி- வடக்கில் : எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9962 2/2 உம் ; கிழக்கில் : எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9965 உம் ; தெற்கில் : எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9939 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) மற்றும் எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9964 உம் ; மேற்கில் : எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9939 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) மற்றும் எவ். வி. பி. வரைபடம் இல. 1267 இல் துண்டு 9964 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் சைபர் தசம் சைபர் ஐந்து இரண்டு (ஹெக். 0.052) அல்லது இருபது தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பீ. டீ. விக்ரமசிங்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹிரிபிட்டிய கிளை.

6-789

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

கடன் தொடர்பு இல. : 71/99

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005.08.05 ஆந் திகதிய 1405 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.07.29 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட், குளியாப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2006.08.31 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வாரியபொல பிரதேச இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் தேவமெதி ஹத்பத்துவில் தேவமெத்த கோரளையில் இமியங்கொட 1238 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் கலுகுலம கிராமத்தில் அமைந்த திப்பட்டுலந்தஹேன-பலுகஹமுலஹேன என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் தயாரித்த வெளிக்களத்தாள் இல. 3 இல் இறதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் துண்டு 30 என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : வழிப்பாதையாகிய துண்டு இல. 22 உம் ; கிழக்கில் : துண்டு 31 உம் ; தெற்கில் : துண்டு இல. 05ஜே உம் ; மேற்கில் : துண்டு இல. 29 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் சைபர் தசம் இரண்டு சைபர் நான்கு (ஹெக். 0.204) விஸ்தீரணமுடையதாகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் டி 334/3624/95 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட களுகலாமயில் அமைந்த திப்பட்டுலந்தஹேன-பாலுகஹமுலஹேன என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான மேற்குறிப்பிட்ட காணியிலிருந்து 1998.10.25 இல் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆரியதாச அத்தபத்து தயாரித்த வரைபடம் இல. 169/98 இல் மிகவும் அண்மைய அளவையில் தற்சமயம் விபரித்த மேற்குறிப்பிட்ட இறுதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் மேற்குறிப்பிட்ட துண்டு இல. 30- வடக்கில் : இறுதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் வழிப்பாதையாகிய துண்டு 22 உம் ; கிழக்கில் : இறுதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் துண்டு 31 உம் ; தெற்கில் : இறுதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் துண்டு 05ஜே உம் ; மேற்கில் : இறுதிக் கிராம வரைபடம் இல. 2538 இல் துண்டு 29 உம் எல்லை களாகக் கொண்டு இரண்டு றூட் சைபர் தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 0.6பே.) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் இரண்டு சைபர் நான்கு (ஹெக். 0.204) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் மற்றும் சம்பந்தப்பட்டவையும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எச். எம். டீ. பீ. தீக்ஸன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வாரியப்பொல கிளை.

6-790

**கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**
**(மருதானை கிளை மூலம்)**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அம்பதலன்பால அலுத்குரு கோரலயில் கொலன்னாவ நகரசபை எல்லைக்குள் எகட கொலன்னாவயில் அமைந்துள்ள தற்சமயம் இலக்கம் 24/19, பண்டாரவத்த (முன்பு இலக்கம் 24/19, ரணசிங்க வீதி), நில அளவையாளர் ஜி. எச். பிலிப்பயாவின் 29.06.1959 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1375 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 இன் பகுதிபடுத்திய) சாலிய விக்ரமசிங்கவின் 29.05.1991 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1633 இல் காண்பிக்கப்பட்ட லொட் பி இன் ஏல விற்பனை (காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 8.5பே. அல்லது ஹெக்டெயர் 8.0215)*

கடன் எடுத்த மொகமட் அசன் மொகமட் இசாம் இக்காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோனுக்கு ஈடுவைத்துள்ளார்.

கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் என்னால் அதே இடத்தில் 2006, யூலை மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கீழ் விவரிக்கப்பட்ட ஆதனம் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படும்.

விளம்பரத்துக்கு 24.02.2006 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 27.02.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலன்ட்", "தினகரன்" மற்றும் 30.06.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 30.06.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப" மற்றும் "த ஐலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி.**– கொலன்னாவ சந்தியில் இருந்து (நகரசபைக்கு முன்பாக) கெப்படிபொல பாதையில் சென்று பிரிவின பாதைக்கு திரும்பி 100 மீட்டர் சென்று அதன் பிறகு 10 அடி பாதை ஊடாக சென்று 30 மீட்டர் சென்ற பிறகு உங்களது வலதுபக்கம் காணி காணப்படும். இக்காணி கொலன்னாவையில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**– உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் தொகை ஏலதாரரிடம் ஏலத்திற்குப் பிறகு பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் (10%) பத்து வீதம் ;

(2) உள்ளூராட்சி வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் (2.5%) இரண்டரை வீதம் ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

(7) மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் மருதானை கிளையில் செலுத்த வேண்டும்.

*உறுதி மற்றும் தகவலுக்காக :*

| | |
|---|---|
| முகாமையாளர், | எல். பி. சேனநாயக்க (ஜே. பி.), |
| கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், | உத்தரவுபெற்ற ஏலதாரர், |
| 549, மருதானை வீதி, | விலைமதிப்பிடுபவர், |
| கொழும்பு 10. | மேலதிக வர்த்தக மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்ற ஆணையாளர், |
| தொலைபேசி இல. : 011-2699195, 011-5334468, 011-2699133 | 99, புதுக்கடை வீதி, கொழும்பு 12. |
| தொலைநகல் இல. : 011-2676204 | தொலைபேசி/ தொலைநகல் : 011-2445393 |

6-798

---

**வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி-நகர அலுவலக கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, கொனஹேனவில் அமைந்துள்ளதும் "மில்லகஹவத்தை", "தெல்கஹவத்தை" மற்றும் "தெல்கஹதெனிய" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர அவர்களால் தயாரிக்கப்பட்ட 1984, யூன் 1 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1466 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டுகள் எக்ஸ் மற்றும் வை என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களுடன் சேர்த்து ;**

**(முறையே துண்டு எக்ஸ் : 4 ஏக்கர் 2 றூட் 45 பேர்ச்சுக்கள் ; துண்டு வை : 1ஏக்கர் 2றூட் 10.9பேர்ச்சுக்கள்)**

***1996.4.23 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1071, 1995.10.09 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 954 மற்றும் 1995.05.19 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 856 ஆகியவற்றின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1956, நவெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1068 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5 மற்றும் 6 என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து ஏல விற்பனை***

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. திருநாவுக்கரசு அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1996, ஏப்பிறல் 23 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1071, 1995, ஒற்றோபர் 9 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 954 மற்றும் 1995, மே 29 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 856 ஆகிய எல்லாவற்றின் மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006, யூலை 14 ஆந் திகதி முறையே மு. ப. 10.30 மற்றும் மு. ப. 10.45 மணிக்கு அதே இடங்களில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2005, யூலை 8 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, மே 3 ஆந் திகதிய "த ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவுகள் செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ; (2) உள்ளூர் அதிகார சபை கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) ; (3) ஏலதாரரின் கட்டணங்கள் 2 1/2% (இரண்டரை வீதம்) ; (4) ரூபா 55,000 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ; (5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ; (6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணம் ரூபா 2,000 முதலியன.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, 'எச்என்பி கோபுரம்', மட்டம் 18, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, முகாமையாளர்-சட்டசம்பந்தமானது (அறவீடுகள்)" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2661815 அல்லது 2661819.

பி. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் பட்டய ஏலதாரர்.

134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656
தொலைநகல் இல. : 2871184
செல்லிட தொலைபேசி இல. : 0777-672082.

6-771